குற்றாலம் அகழ்வைப்பகக் கையேடு

ஆசிரியர்கள்

சொ. சந்திரவாணன்

தே. கோபாலன்

பதிப்பாசிரியர்

முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை -600 008

2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042

TITLE	:	Kuttralam Museum Guide
Editor	:	Principal Secretary and Commissioner
Copy Right	:	Tamilnadu State Dept. of Archaeology
Subject	:	History & Museum
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	238
Year	:	2010
Type Point	:	12
No. of Pages	:	48
Paper Used	:	80Gsm Maplitho
Printer	:	Tamcos printers 46, Peters Road, Royapettah, Chennai-14
Publisher	:	State Dept. of Archaeology, Tamil Valarchi Valagam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 21.00

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இ.ஆ.ப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008

பதிப்புரை

தமிழகத் தொல்லியல்துறை; கல்வெட்டுகளைப் படியெடுத்து அச்சிட்டு வெளியிடுவது, மற்றும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்களில் அகழாய்வு செய்து அவ்வறிக்கைகளை நூலாக வெளியிடுவது, ஓலைச் சுவடிகள், செப்பேடுகள் போன்றவற்றை வாசித்து வெளியிடுவது போன்ற பணிகளுடன் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்களில் வரலாற்றுச் சின்னங்களை அகழ்வைப்பகங்கள் அமைத்து அப்பகுதியின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்தவும், பாதுகாத்தல் போன்றவற்றையும் செய்து வருகின்றது. தமிழகத்தில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையான தனித்தன்மைகள், மற்றும் வட்டார வழக்குகள் காணப்படுகின்றன, இவை அப்பகுதியின் இயற்கை அமைப்பை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.

அகழ்வைப்பகம் என்பது அவை அமைந்துள்ள மாவட்டத்தின் சிறப்பியல்புகளைக் கூறுவதுடன் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு, தொல்பொருட்கள் மற்றும் அப்பகுதியில் பூமிக்கடியில் கிடைக்கும் புதைபொருட்கள் போன்றவற்றை சேகரித்து வைக்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டவையாகும்.

இதுபோன்ற செய்திகளை அனைவரும் படித்துணரவும் பார்த்துணரும் வண்ணமும் இந்நூலினை வெளிக்கொணர பகுதி II திட்டத்தின் கீழ் நிதியுதவி அளித்துச் சிறப்பித்த தமிழ்நாடு அரசுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலினைப் பதிப்பிக்கும் பணியினை முன்னின்று ஏற்றுச் சிறப்புச் செய்த முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கும் இந்நூலினை நல்லமுறையில் டிடிபி செய்து அட்டைப்படம் வடிவமைத்த திருமதி தே. சத்தியவதி மற்றும் அச்சுப்பிழைதிருத்திய திருமதி. கோ. செம்மலர் ஆகியோருக்கும் பாராட்டுகள்.

இச்சிறு நூல் பொதுமக்களுக்கும், பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்க்கும் பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சென்னை-600 008 **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

25-03-2011

குற்றாலம் அருங்காட்சியகம்

(நாட்டுப்புறக்கலை — அருங்காட்சியகம் குற்றாலம்)

குற்றாலம் பண்பாட்டையும் இந்துமத வழிபாட்டையும் தன்னகத்தே தக்க வைத்துக் கொண்ட சிறப்பு வாய்ந்த பழமையான நகரமாகும். குற்றாலத்தினுடைய பழமை பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள், பழைய குற்றாலம் அழுதகண்ணி ஆற்றங்கரையில் காணப்படுகின்றன.

குற்றாலத்தின் தொன்மை வரலாறு

கற்காலத்தை; பழைய கற்காலம், மத்திய கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற்காலம் என பிரித்துக் கூறுவர். அக்கால மனிதர்கள் பயன்படுத்திய கற்களை வைத்து இந்தக் காலப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தென் தமிழ் நாட்டில் மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் நுண்கற்காலத்திலிருந்தே கிடைக்கின்றன. நுண்கற்காலத்தை சார்ந்த மக்கள் மிருகங்களை வேட்டையாடுவதற்காக மிகச்சிறிய கல் ஆயுதங்களைப் பயன்படுத்தியதால் அக்காலம் நுண்கற்காலம் என அழைக்கப்பட்டது.

குற்றாலத்தில் உள்ள அழுதகண்ணி ஆற்றில் நுண்கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே குற்றாலத்தில் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை அறியலாம்.

இதனை அடுத்து பெருங்கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் பழைய குற்றாலத்திலும், அதனை அடுத்த ஆயிரப்பேரி என்ற கிராமத்திலும் பெருங்கற்காலப் பண்பாட்டுத் தடையமாகிய முதுமக்கள் தாழிகளும், கருப்பு, சிவப்புக் கலையங்களும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவை பெருங்கற்கால மக்கள் குற்றாலம் பகுதியில் வாழ்ந்ததை உறுதி செய்கின்றன.

குற்றாலம்; அருவிகளால் சிறப்புற்று விளங்குகின்றது. குளித்து மகிழ்வதற்காகவே சுற்றுலா வருகிறார்கள் என்றால் அது குற்றாலத்திற்குத் தான். இங்கு பேரருவி, சிற்றருவி, செண்பகாதேவி அருவி, தேனருவி, பழந்தோட்ட அருவி, ஐந்தருவி, புலி அருவி, புது அருவி, பழைய குற்றாலம் அருவி என 9 அருவிகள் உள்ளன. பேரருவியின் அருகில் பழைமை வாய்ந்த சிவன் கோயில் உள்ளது. கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரும் சம்பந்தரும் இவ்வூரின் இயற்கை வளத்தையும், குற்றாலத்து உறையும் கூத்தனின் பெருமையையும் சிறப்பித்து பாடியுள்ளார்கள்.

' வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டு யாழ்செய் குற்றாலம்"

என்று குற்றாலத்தின் இயற்கை வளத்தை சம்பந்தர் குற்றாலப் பதிகத்துள் உயர்ந்து போற்றுகின்றார்.

' உற்றார் ஆருளரோ உயிர்
கொண்டு போம் பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு
உற்றார் ஆருளரோ"

என்று அப்பர் பெருமான் குற்றாலத்து இறைவனே உயிர் போகும் வேளையில் துணைவனாக இருப்பன் என இறைச்சிறப்பை புகழ்ந்து கூறுகிறார்.

அப்பர் சம்பந்தர் வரும் காலத்திலேயே (கி.பி. 7–ஆம் நூற்றாண்டு) இவ்வூரும், சிவ வழிபாடும் இங்கு சிறந்து விளங்கியிருந்தது என்பதற்கு, இவர்கள் பாடிய பாடல்களே சான்றாகின்றன. திருக்குற்றாலநாதர் கோயிலில் காணப்படும் பாண்டியர், சோழர், நாயக்கர், தென்காசிப் பாண்டியர்கள், திருவிதாங்கூர் மன்னர்கள், ஜமீன்தார்கள் ஆகியோருடைய கல்வெட்டுகள் இவ்வூரின் தொடர்ச்சியான வரலாற்றை உறுதி செய்கின்றன.

அருங்காட்சியகம்

சிறப்பு வாய்ந்த இவ்வூரில் பேருந்து நிலையத்திலிருந்து பேரருவிக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள சொக்கம்பட்டி சத்திரம் என்னும் கட்டிடத்தில் தொல்லியல் துறையின் அருங்காட்சியகம் இடம் பெற்றுள்ளது. இவ்வருங்காட்சியகம் தமிழகத்தின் கலாச்சாரப் பழமையையும், கலைச்சிற்பப் பழமையையும், எழுத்து வடிவங்களின் பழமையையும் எடுத்துக் காட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வருங்காட்சியகத்தில் அமைந்துள்ள 9 காட்சிப் பெட்டிகளில் இவ்வூர் வரலாற்றோடு தொடர்புடைய தொல் பொருட்கள், காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

முதலாவது காட்சிப் பெட்டியில்;

நுண்கற்காலக் கருவிகள் இடம் பெற்றுள்ளன. இக்கருவிகள் குற்றாலத்தின் அருகில் உள்ள அழுதகண்ணி ஆற்றிலும். திருமலாபுரம், செந்தட்டியாபுரம், சாயர்புரம் போன்ற ஊர்களில் சேகரிக்கப்பட்டவையாகும். இவற்றில் ஒரு முனை அறுப்பான், இருமுனை அறுப்பான், கூர்முனை போன்ற கருவி வகைகள் அடங்கும். இதே காட்சிப் பெட்டியில் நுண்கற்காலத்தை அடுத்து வந்த புதிய கற்காலத்தைச் சார்ந்த கற்கருவிகளும் இடம் பெற்றுள்ளன. வளவளப்பாகச் செய்யப்பட்டுள்ள இக்கருவிகள் கற்கோடாரிகள் ஆகும். இவை குற்றாலம் அருகில் உள்ள தென்காசியில் ஆசாத் நகரிலும் குற்றாலம் அம்பாசமுத்திரம் சாலையில் அமைந்துள்ள கீழ ஆம்பூரிலும் சேகரிக்கப்பட்டவையாகும். மேலும் இக்கருவிகள் செய்யப் பயன்படுத்தப்பட்ட மூலக்கற்களும் இடம் பெற்றுள்ளன.

இரண்டாவது காட்சிப் பெட்டியில் ;

பெருங்கற்காலத்தைச் சார்ந்த கருப்புச் சிகப்பு வண்ணக் கலையங்களும், கிண்ணங்களும், கலைய மூடிகளும், பிரிமனைகளும், ஏணி வடிவ குறியீடு பொறிக்கப்பட்ட பானை ஓடும் இடம்பெற்றுள்ளன. கலையங்களின் அளவும் வடிவமும் ஒன்றில் இருந்து மற்றொன்று மாறுபட்டதாகக்

காணப்படுகின்றன. கலையங்கள் அமைக்கப்பட்டிருக்கும் விதம் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் வாழ்ந்த குயவர்களின் கைத்திறனை எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது. இதே காட்சிப் பெட்டியில் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த இரும்பு வாளின் உறைப் பகுதியும், வாளின் கைப்பிடியும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை பழந்தமிழர் இரும்பைக் காய்ச்சி வடிக்கும் திறன் பெற்று இருந்ததை எடுத்துக் காட்டுகின்றன. இதோடு இக்காட்சிப் பெட்டியில் வளை அறுத்த சங்குகளும், சங்கு வளையல் துண்டுகளும், மற்றும் சுடுமண் தக்களியும், சுடு மண்ணால் ஆன எடைக்கற்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் இக்காட்சிப் பெட்டி சங்க காலப் பண்பாட்டை விளக்குவதாக அமைகிறது.

மூன்றாவது காட்சிப் பெட்டியில் ;

சுடுமண் பொம்மைகளும் சுதைச் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. சுடுமண் பொம்மைகள் ஆலங்குளம் அருகில் உள்ள ஆண்டிப்பட்டி மலை சாஸ்தா கோயில் அருகில் சேகரிக்கப்பட்டவை ஆகும். இவை கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இவற்றுள் ஒரு பெண்ணினுடைய சுடுமண் உருவம் மிக அழகியதாகும். சுதைச் சிற்பங்கள் தென்காசி கோபுரத்தை புதுப்பிக்கும் போது சேகரிக்கப்பட்டவை ஆகும். இக்கோபுரம் தென்காசி பாண்டியன், குலசேகரபாண்டியனால் கட்டப்பட்டதாகும். எனவே இச்சுதைச் சிற்பங்கள் அம்மன்னன் காலத்தைச் சார்ந்த கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. மேலும் இக்காட்சிப் பெட்டியில் ஓமநல்லூரில் சேகரிக்கப்பட்ட பிரம்மாவின் சுதைச் சிற்பமும் (தலைப்பகுதி மட்டும்) காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

நான்காவது காட்சிப் பெட்டியில் ;

சீன தேசத்து களிமண்ணாலான பெண் உருவம் இடம் பெற்றுள்ளது. இது கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இவ்வுருவம் கல்லூரணி என்ற ஊரில் சேகரிக்கப்பட்டதாகும். சீனத்து வணிகம் இப்பகுதிவரை நிலவியதை இவ்வுருவம் எடுத்துக்காட்டுகிறது.

இதே காட்சிப் பெட்டியில் சொரிமுத்து அய்யனார் கோயிலில் இருந்து சேகரிக்கப்பட்ட கால் சிலம்புகளும், கைக் கடகங்களும் இடம்பெற்றுள்ளன. இவை பித்தளை உலோகத்தால் செய்யப்பட்டவை ஆகும். சிலம்புகளைப் பற்றி இலக்கியங்கள் கூறக் கேட்டு இருப்போம். கண்ணகியின் கால் சிலம்பு ஒரு வரலாற்றையே உருவாக்கியதை இளங்கோவடிகள் விவரித்து கூறுகிறார். சிலம்பு என்னும் அணிகலனை காண வேண்டுமென்றால் குற்றாலம் அருங்காட்சியகம் வரவேண்டும்.

ஐந்தாவது காட்சிப் பெட்டியில் ;

16–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்புப் பட்டயங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் 2 செப்புப் பட்டயங்கள் தமிழிலும், ஒரு செப்புப் பட்டயம் தெலுங்கிலும் பொறிக்கப்பட்டுள்ளது. இச்செப்புப் பட்டயங்கள் விஜயரெங்கச் சொக்கநாதர் நாயக்கர் காலத்திலும், தென்காசிப் பாண்டியமன்னர் காலத்திலும் வெளியிடப்பட்டவை ஆகும். இவை புராணத்தையும் தானத்தையும் பற்றிய செய்தியைக் கொண்டுள்ளன.

ஆறாவது காட்சிப் பெட்டியில் ;

ஓலைச் சுவடிகளும், மரச்சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. ஓலைச் சுவடிகளில் இலக்கியங்களும், மருத்துவச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் இராமாயண ஓவியச் சுவடி குறிப்பிடத்தக்கதாகும். இதனுடைய சட்டப் பலகைகள் தந்தத்தால் செய்யப்பட்டவை ஆகும். தந்தத்தின் மேல் ஸ்ரீராமர், சீதை, லட்சுமணர், ஆஞ்சநேயர் ஆகியோருடைய உருவங்கள் மூலிகைச்சாறு கொண்டு வரையப்பட்டுள்ளன. மற்றொரு சட்டத்தந்தப் பலகையில் சங்கு, சக்கரம், நாமம் ஆகியவை ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

ஏழாவது காட்சிப் பெட்டியில் ;

கோயில்களில் இறை மரியாதைக்காகப் பயன் படுத்தப்பட்டு பித்தளையால் செய்யப்பட்ட விசிறி, குடை, சாமரம், ஆலவட்டம், கண்ணாடியும் மேலும் அழகிய

பிரபையும், நாழியும் இடம்பெற்றுள்ளன. இவை சங்கரன் கோவிலில் இருந்து சேகரிக்கப்பட்டவையாகும். இவை 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகும்.

எட்டாவது காட்சிப் பெட்டியில் ;

பழங்குடி மக்கள் பயன்படுத்திய மூங்கிலினால் செய்யப்பட்ட பொருட்கள் இடம்பெற்றுள்ளன. மீன் பிடிக்கப் பயன்படும் கூடை, மர உரல், முறம், தேன் குடுவை, வில், எலிப்பொறி, கைத்தடி, மரத்தால் ஆன கொண்டை ஊசி, சிக்குறுவி, அம்புராத்தூணி ஆகியவை இடம்பெற்றுள்ளன. இப்பொருட்கள் படிங்குடி மக்களின் வாழ்க்கையைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

ஒன்பதாவது காட்சிப் பெட்டியில் ;

பீரங்கிக் குண்டுகளும், கவண் கற்களும் இடம் பெற்றுள்ளன. இவை ஆங்கிலேயர் காலத்தில் பயன்படுத்திய பீரங்கிக்குண்டுகளும், புலித்தேவன் பயன்படுத்திய கவண் கற்களையும் காட்டுகின்றன. ஆங்கிலேயரின் சக்திவாய்ந்த பீரங்கிக்குண்டுகளை எதிர்க்க, சாதாரண கவண் கற்களையே இந்தியர்களால் பயன்படுத்த முடிந்தது என்பதை இக்காட்சிப் பெட்டி விளக்குகிறது.

சிலைகள் ;

அருங்காட்சியகத்திற்குள் நுழைந்தவுடன் அனை வரையும் புன்னகையோடு வரவேற்கும் வகையில் 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திருமால் சிலை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. துவரங்காடு என்ற ஊரில் இருந்து இச்சிலை சேகரிக்கப்பட்டுள்ளது. சங்கு சக்கரம் ஏந்தி அழகிய கிரீட மகுடம் அணிந்து வடிக்கப்பட்டு இருக்கும் இச்சிலை முற்காலப் பாண்டியர்களின் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிராம்மியின் சிலை வாயிலின் அருகில் உள்ள பீடத்தில் காட்சி தருகிறது. நான்கு

கரங்களோடு, வலக்காலை மடக்கி இடக்காலைத் தொங்கவிட்ட நிலையில் அழகாக வடிவமைக்கப்பட்டு இருக்கும் இச்சிலை வாள்போக்கி என்ற ஊரில் சேகரிக்கப்பட்டது.

உக்கிரன்கோட்டை என்ற ஊரில் சேகரிக்கப்பட்ட மகாவீரர் சிலை 5... உயரமும் 3... அகலமும் கொண்ட பிரம்மாண்டமான இச்சிலை இவ்வருங்காட்சியகத்தின் சேகரிப்புகளில் குறிப்பிடத்தக்கதாகும். தலைக்கு மேலே முக்குடையும், குடைக்கு மேலே மரக்கிளைகளும் காட்டப்பட்டுள்ளன. மகாவீரரின் இருபுறமும் சாமரம் தாங்கிய யக்ஷர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன. மகாவீரர் அர்த்தபத்மாசனத்தில் யோக நிலையில் கைகளை வைத்து காட்சி தருகிறார். அவர் தலையின் பின்புறம் ஒளி வட்டம் காட்டப்பட்டுள்ளது.

மேலும் இவ்வருங்காட்சியகத்தில், ஆறுமுகர், லெட்சுமி நாராயணர், திரிபுராந்தகர், சிவனடியார், ஹஸ்தி ஹஸ்தம் யாழிவரி, கெஜலெட்சுமி போன்ற சிலைகளும் நாட்டுப்புற தெய்வச் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் திரிபுராந்தகர் சிற்பம் தென்காசிப் பாண்டியர் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

கல்வெட்டுப்படிகள் ;

காட்சிப்பலகை 1-இல் பண்டைத் தமிழ் எழுத்துக்களும் வட்டெழுத்துக்களும் எழுதி வைக்கப் பட்டுள்ளன. இதே காட்சிப் பலகையில் தமிழ் எழுத்தின் வளர்ச்சியும் காட்டப்பட்டுள்ளது.

பாண்டியர் காலத்து கல்வெட்டுப் படிகளில் ஆனைமலை, சாத்தூர், இருக்கன்குடி, விஜயநாராயணம், பாளையங்கோட்டை ஆகிய ஊரைச் சார்ந்த கல்வெட்டுக்கள் இடம் பெற்றுள்ளன.

இருக்கன்துறை, ஆதனூர் ஆகிய ஊர்களில் உள்ள பரகேசரி, முதலாம் இராச இராசன் ஆகிய சோழ மன்னர்களின் வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் படி எடுத்து காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

பிற்காலப் பாண்டிய மன்னர் கல்வெட்டுகள் சில படி எடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவை சீவலப்பேரி, கல்லிடைக்குறிச்சி போன்ற ஊர்களில் இருந்து எடுக்கப் பட்டவையாகும். அவை முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், சடையவர்மன் குலசேகரன் போன்ற மன்னர்களின் காலத்தில் பொறிக்கப்பட்டவை ஆகும்.

ஆங்கிலேயர் காலத்துக் கல்வெட்டுகளில் குறிப்பிடத்தக்கவை ஆங்கிலேயர் தேவாலயத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஆஷ் துரையின் கல்வெட்டும், 'ஹூப்ரு" மொழிக் கல்வெட்டும் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவற்றைத் தவிர 'பார்சி" மொழிக் கல்வெட்டு ஒன்றும் இடம் பெற்றுள்ளன.

குற்றாலம் அருங்காட்சியகத்தில் தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையின் வெளியீடுகள் விற்பனைக்கு உள்ளன.

குற்றாலம் அருங்காட்சியகம் சிறிய அருங்காட்சியமாக இருந்த போதிலும் அரிய தொல் பொருட்களைக் கொண்டு வரலாற்றையும் தமிழர் பண்பாட்டையும் விளக்கும் வகையில் அமைந்த நிலையில் அனைவரும் காண வேண்டிய இனிய அருங்காட்சியமாகும்.

குற்றாலம் அகழ்வைப்பகம் -கலைப்பொருட்கள் பற்றிய விவரப் பட்டியல்

வ.எண்	பொருளின் பெயர்	எண்ணிக்கை	தன்மை	காலம்
1.	திருமால்சிலை	1	கற்சிற்பம்	கி.பி.8
2.	பிராம்மி	1	கற்சிற்பம்	கி.பி.10
3.	சிவனடியார்	1	கற்சிற்பம்	கி.பி.17
4.	விளக்குப்பாவை	1	கற்சிற்பம்	கி.பி.17
5.	கருடாழ்வார்	1	கற்சிற்பம்	கி.பி.17
6.	திரிபுராந்தகர்	1	கற்சிற்பம்	கி.பி.17
7.	ஹஸ்திஹஸ்தம் (சிறியது)	2	கற்சிற்பம்	கி.பி.17
8.	ஹஸ்திஹஸ்தம் (பெரியது)	2	கற்சிற்பம்	கி.பி.17
9.	நந்திதேவர்	1	கற்சிற்பம்	கி.பி.17
10.	வீர ஆஞ்சநேயர்	1	கற்சிற்பம்	கி.பி.17
11.	கருப்பசாமி	1	கற்சிற்பம்	கி.பி.17
12.	சிற்பத்தூண்	1	கற்சிற்பம்	கி.பி.17
13.	ஆறுமுகநயினார்	1	கற்சிற்பம்	கி.பி.16
14.	மகரதோரண வினாயகர்	1	கற்சிற்பம்	கி.பி.10

வ.எண்	பொருளின் பெயர்	எண்ணிக்கை	தன்மை	காலம்
15.	லெட்சுமி நரசிம்மர்	1	கற்சிற்பம்	கி.பி.17
16.	மகாவீரர்	1	கற்சிற்பம்	கி.பி.13
17.	கெஜ லெட்சுமி	1	கற்சிற்பம்	கி.பி.17
18.	யானை மற்றும் யாழி வரித்தொகுதி	1	கற்சிற்பம்	கி.பி.17
19.	உடன்கட்டை எறியோர் சிற்பம்	2	கற்சிற்பம்	கி.பி.16
20.	பாம்பின் கீழ் பாலமுருகன்	1	கற்சிற்பம்	கி.பி.18
21.	சீன பொம்மை	1	களிமண்	கி.பி.13
22.	பெண் தெய்வம்	1	சுடுமண்	கி.பி.17
23.	முதுமக்கள் தாழி	1	சுடுமண்	கி.மு.1
24.	உட்சிறு கலையங்கள்	20	சுடுமண்	கி.மு.1
25.	கலைய மூடிகள்	2	சுடுமண்	கி.மு.1
26.	கலையத்திற்கான தாங்கி	3	சுடுமண்	கி.மு.1
27.	சுடுமண் பொம்மைகள்	5	சுடுமண்	கி.மு.16,17
28.	சோழர் காலச் செங்கல்	1	சுடுமண்	கி.பி.10

வ.எண்	பொருளின் பெயர்	எண்ணிக்கை	தன்மை	காலம்
29.	சுதை உருவங்கள்	3	சுண்ணாம்பு	கி.பி.16,17
30.	கால்சிலம்பு (தண்டை)	2	உலோகம்	கி.பி.18
31.	கைச்சிலம்பு	1	உலோகம்	கி.பி.18
32.	சோடசோபசாரப் பொருட்கள்	7	உலோகம்	கி.பி.17
33.	பிரபை	1	உலோகம்	கி.பி.16
34.	பாவை	1	உலோகம்	கி.பி.18
35.	நாழி	1	உலோகம்	கி.பி.17
36.	செப்புப்பட்டயங்கள்	3	செம்பு	கி.பி.1753
37.	செப்புப்பட்டயம்	1	செம்பு	கி.பி.1703
38.	காளிசிற்பம் (மரம்)	1	மரம்	கி.பி.16,17
39.	யாழி தலை சிற்பம் (மரம்)	1	மரம்	கி.பி.16,17
40.	ஓலைச்சுவடி மேல் கட்டை (இராமயாணம்)	2	தந்தம்	கி.பி.18
41.	பீரங்கிகல்குண்டு (சிறியது)	4	கல்	கி.பி.19
42.	பீரங்கிகல்குண்டு (பெரியது)	1	கல்	கி.பி.19

மேற்கண்ட பட்டியல் பொருட்கள் தவிர கீழ்காணும் பொருட்களின் விவரங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

நுண்கற்கருவிகள்	-	50 எண்ணம்
புதிய கற்காலக் கருவிகள்	-	2
சங்கு அறுத்த வளையல் துண்டுகள்	-	5
வாள் உறை, கைப்பிடித் துண்டுகள்	-	2
எடைக்கற்கள் (சுடுமண்)	-	2
கூரை ஓடுகள் (சுடுமண்)	-	4
ஓலைச்சுவடிகள்	-	20கட்டுகள்
தனி ஓலை	-	1

நாட்டுப்புற கலைப்பொருட்கள் :-

முறம், மரஉரல், மீன்பிடி உபகரணங்கள், எலி பிடிக்கும் கருவி, கைத்தடி (செங்கோல்), அம்புக்கூடு, கூடை, தேன் சேகரிக்கும் மூங்கில் பாத்திரம், கொண்டை ஊசிகள், மான்கொம்பு முதலியன.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்கள்

அம்பாசமுத்திரம்

திருநெல்வேலிக்கு தென்மேற்கே 35 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரில் எரிச்சா உடையார் கோயில் மற்றும் திருமூலநாதர் கோயில் ஆகிய கோயில்களில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டுகள் இவ்வூரின் தொன்மை வரலாற்றினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

எரிச்சா உடையார் கோயிலில் வரகுணபாண்டியன், சடையமாறன், சோழன் தலைகொண்ட வீரபாண்டியன், சடாவர்மன் சுந்தரசோழ பாண்டியன், சடாவர்மன் சீவல்லபன் ஆகியோரின் கல்வெட்டுகள் பொறிக்கப் பட்டுள்ளன. வரகுண பாண்டியனின் 16-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் இவ்வூர் முள்ளிநாட்டு இளங்கோய்க்குடி என்றும் இறைவன் திருப்போத்துடையார் ஸ்ரீகோயில் படாரர் என்றும் குறிப்பிடப்படுகின்றன. சடாவர்மன் சீவல்லபனின் 20-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இவ்வூர் முள்ளிநாட்டு பிரம்மதேயம் ஸ்ரீராஜராஜ சதுப்பேதி மங்கலம் என்றும் இறைவன் திருப்போத்துடைய மகாதேவர் என்றும் வழங்கப் பட்டதிலிருந்து இவ்வூர் பிற்காலத்தில் பிராமணர்களுக்கத் தானமாக வழங்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

திருமூலநாதர் கோயிலில் மாறஞ்சடையன், சடையமாறன், சோழன் தலைகொண்ட வீரபாண்டியன், சடாவர்மன் சுந்தரசோழ பாண்டியன் ஆகியோரின் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் இவ்வூர் முள்ளிநாட்டு பிரம்மதேயம் இளங்கோய்க்குடி என்றும் ஸ்ரீராஜராஜ பாண்டிநாட்டு முடிகொண்ட சோழவளநாட்டு முள்ளிநாட்டு பிரம்மதேயம் ஸ்ரீராஜராஜ சதுப்பேதிமங்கலம் என்றும் குறிப்பிடப் படுகின்றன. இறைவன் திருச்சாலைத்துறை நின்றருளிய பெருமாள் என்றும் திருச்சாலைத்துறை ஸ்ரீமூலஸ்தான ஆழ்வார் என்றும் குறிப்பிடப்படுகின்றார் சடாவர்மன் சுந்தரசோழ பாண்டியனின் 13-ஆவது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில்

நானாதேசித் திசை ஆயிரத்து ஐநூற்றுவர் என்ற பெயரில் ஒரு வணிகக் குழு இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்குழுவினைச் சேர்ந்த சோலை ஐநூற்றுவன் என்பவன் இக்கோயிலுக்குத் தானம் வழங்கியதைப் பற்றி இக்கல்வெட்டு கூறுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் பல இடங்களில் உள்ள கல்வெட்டுகளிலும் இவ்வணிக அமைப்புப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரிகேசவநல்லூர்

இவ்வூர் அம்பாசமுத்தரம் வட்டத்தில் வீரவநல்லூரிலிருந்து இரண்டு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள சிவன் கோயிலில் மொத்தம் 13 கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் பழமையானது சடாவர்மன் குலசேகரனுடைய (கி.பி. 1190-1221) கல்வெட்டாகும். எனவே இம்மன்னனது காலத்திலேயே இக்கோயிலின் தற்போதைய அமைப்பு கட்டப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. கல்வெட்டுகளில் இவ்வூர் அரிகேசரிநல்லூர் என்றும் இறைவனது பெயர் அரிகேசரியீசுவரமுடையார் என்றும் குறிப்பிடப்படுகின்றன.

மூன்றாம் திருச்சுற்றில் வடகிழக்கு மூலையில் அம்மன் கோயில் அமைந்துள்ளது. இவ்வம்மன் பெரிய நாச்சியார் எனக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறாள்.

அக்கோயிலில் பல சிற்பங்கள் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கலை அமைதியினைக் கொண்டு விளங்குகின்றன. எனவே இங்கு அக்காலத்திலேயே கோயில் இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

ஆழ்வார்குறிச்சி

அம்பாசமுத்திரம் வட்டத்தில், அம்பாசமுத்திரத்திற்கு வடமேற்கே ஆழ்வார்குறிச்சி அமைந்துள்ளது. இவ்வூரில் அமைந்துள்ள ஆவுடையம்மன் கோயில் மற்றும் வள்ளியப்பர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள் இப்குதியினை வரலாற்றினை ஓரளவு அறிந்து கொள்வதற்கு உதவுகின்றன.

ஆவுடையம்மன் கோயிலில் கோனேரின்மை கொண்டானின் 6-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனாக இருக்கலாம்) இவ்வூரினைக்

கொல்லம் கொண்ட பாண்டியச் சதுர்வேதி மங்கலம் என்றும் , இறைவனை நரசிங்க ஈஸ்வரமுடைய நாயனார் என்றும் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டு சுந்தரபாண்டியன் காலிங்கராயர் எழுத்து எனத் தொடங்குகிறது. இவன் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அதிகாரியாக இருந்தவனாகையினால் கோனேரின்மை கொண்டான் என இக்கல்வெட்டு குறிப்பிடுவது முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனைத்தான் என்பது தெளிவாகின்றது.

வள்ளியப்பர் கோயிலில் மன்னர் பெயர் குறிப்பிடப் படாத ஒரு கல்வெட்டில் இவ்வூர் முள்ளிநாட்டு பிரம்மதேயம் ஸ்ரீராஜராஜ சதுர்வேதிமங்கலத்து வடமேல் பிடாகை காடேறு என்றும், இறைவன் திருவள்ளீச்சுரமுடையார் என்றும் குறிப்பிடப்படுகின்றன.

அதே கோயிலில் கி.பி. 1612-இல் பொறிக்கப்பட்டுள்ள நாயக்கர் காலக் கல்வெட்டில் இவ்வூர் முள்ளிநாட்டு வடமேல் பிடாகை ஆழ்வார்குறிச்சி என்றும், இறைவன் நயினார் திருமுள்ளிசுரமுடைய நம்பிரானார் என்றும் குறிப்பிடப் படுகின்றன.

இடைக்கால்

இவ்வூர் அம்பாசமுத்திரம் வட்டத்தில், அம்பா சமுத்திரத்திற்கு வடக்கே அமைந்துள்ளது. இவ்வூரின் வரலாற்றினை அறிவதற்கு இங்கு அமையப்பெற்றுள்ள தியாகராஜசுவாமி சிவன் கோயிலும், கருமாணிக்கப் பெருமாள் கோயிலும் நமக்கு ஓரளவு துணை நிற்கின்றன. தியாகராஜசுவாமி கோயிலில் கொல்லம் 739-இல் (கி.பி. 1563) பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இவ்வூரினைத் தென் திருவாரூர் என்றும், இறைவனை அம்பிகையீஸ்வரர் என்றும் குறிப்பிடுகின்றது. இராமராஜா விதலஈஸ்வர மகாராஜாவின் கல்வெட்டில் இறைவன் திருவாம்பிகை ஈஸ்வரமுடையார் எனக் குறிப்பிடப்படுகின்றார். விசுவநாத நாயக்கரின் மகனான கிருஷ்ணப்ப நாயக்கரின் கல்வெட்டு ஒன்றும் இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. கருமாணிக்ப் பெருமாள் கோயிலில் சடாவர்மன் குலசேகர

பாண்டியனின் (பூவின் கிழத்தி) 17-ஆவது மற்றும் 21-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும், சடாவர்மன் குலசேகர பாண்டியனின் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் இவ்வூர் இராஜராஜ சதுர்வேதிமங்கலம் என்றும் இறைவன் செயதுங்க விண்ணகராழ்வார் என்றும் செயதுங்க விண்ணகரெம்பெருமான் என்றும் குறிப்பிடப் படுகின்றன. குலசேகர பாண்டியனின் 17-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இராஜராஜ சதுர்வேதிமங்கலத்து ஊர்ச்சபை பற்றிக் குறிப்பிடுகின்றது.

இலஞ்சி

இவ்வூர் தென்காசி வட்டத்தில் தென்காசிக்கு வடமேற்கே சுமார் 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர்ப் பகுதியில் பெருங்கற்காலத்தைச் சார்ந்த சுமார் 2,500 ஆண்டுகட்கு முற்பட்ட ஈமத்தாழிகள் ஒன்றினுள் அக்கால மனித மண்டையோடு முழுமையாகக் கிடைத்துள்ளது. இவ்வூரின் தொன்மை வரலாறு பெருங்கற்காலத்திலிருந்து தொடங்குவதை இச்சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வூரில் பிற்காலப் பாண்டியயர் காலத்தில் எடுக்கப் பட்ட குமாரசுவாமி கோயில் உள்ளது. இக்கோயிலில் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் (கி.பி. 1409) 14-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, மாறவர்மன் சீவல்லபனின் 30-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சடாவர்மன் குலசேகர பாண்டியனின் 10-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுகளில் இவ்வூர் தென்வாரிநாட்டு இலஞ்சி எனும் சுந்தரபாண்டிய நல்லூல் என்றும் சுந்தரபாண்டிய நல்லூர் என்றும் இறைவன் இருவற்கு ஈஸ்வரமுடைய நாயனார் என்றும் திருபாகீஸ ுரமுடைய நாயனார் என்றும் குறிப்பிடப்படுகின்றன.

கங்கைகொண்டான்

இவ்வூர் மதுரை திருநெல்வேலி சாலையில் திருநெல்வேலிக்கு வடக்கே 16 கி.மீ. தொலைவில் சிற்றாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இவ்வூரின் மேற்கே சிற்றாற்றின்

(தொன்மை பெயர் சித்ராநதி) தென்கரையில் சோழர் காலத்தில் எடுப்பிக்கப்பட்ட கைலாசநாதர் கோயில் இவ்வூரின் வரலாற்றினை ஓரளவு அறிந்து கொள்வதற்குத் துணைபுரிகின்றது.

தலபுராணத்தில் அகத்தியரால் தென்பாண்டி நாட்டில் அர்ப்பணம் செய்யப்பட்ட மூன்று கோயில்களில் ஒன்றாக இக்கைலாசநாதர் கோயில் கருதப்படுகிறது. மேலும் புளியவனத்தில் (கல்பக) உள்ள இக்கோயில் அக்கினி வழிபட்டதாகவும், சிவனின் மூன்றாவது கண்ணாகவும் கருதப்பட்டு வருகின்றது.

இக்கோயிலில் மூன்றாம் இராசராசன் மற்றும் முதலாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டுகள் பொறிக்கப் பட்டுள்ளன. இராசராசனின் 8 மற்றும் 26-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளில் இவ்வூர் ஸ்ரீவல்லபச் சதுர்வேதி மங்கலம் எனக் குறிப்பிடப்படுகின்றது. இப்பெயரே இராசேந்திர சோழனின் தொடக்க ஆட்சிக்காலம் வரை நிலவி வந்துள்ளது. இவனது கங்கையாற்றுப் படுகையின் படையெடுப்பிற்குப் பின் இவ்வூர் கங்கைகொண்ட சோழச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளதை சடாவர்மன் சுந்தரசோழ பாண்டியனின் கல்வெட்டொன்றின் மூலம் அறியலாம். இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள பாண்டியர் கல்வெட்டுகளில் மாறஞ்சடையன், முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், சீவல்லபன் ஆகியோரது கல்வெட்டுகள் அடங்கும். மாறஞ்சடையனின் கல்வெட்டில் இவ்வூர் கீழ்களக்கூற்றத்து பிரம்மதேயம் சீவல்லமங்கலம் என்றும் இறைவன் ஸ்ரீகயிலாயத்துப் படாரர் என்றும் குறிப்பிடப்படுகின்றன. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டில் இவ்வூர் கீழ்களக்கூற்றம் கங்கைகொண்டான் என்றும் இறைவன் ஸ்ரீகயிலாயமுடைய நாயனார் என்றும் குறிப்பிடப்படுகின்றன.

இக்கோயில் முதலாம் பராந்தக சோழனால் (மதிரை கொண்டான்) எடுப்பிக்கப்பட்டிருக்கலாமோ எனும் ஐயத்தினை முதலாம் இராசராசனின் 26-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று ஏற்படுத்துகின்றது. இக்கோயிலுக்கருகில்

ஸ்ரீவீரநாராயண ஏரி என்னும் ஒரு குளம் இருந்ததாக இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. முதலாம் பராந்தகனுக்கு வீரநாராயணன் என்ற பட்டப்பெயர் இருந்தது இங்கு கருத்தில் கொள்ளத் தக்கது. ஆனால் தற்போது காணப்படும் கோயிலின் முழுப்பகுதியும் முதலாம் இராசராசன் மற்றும் முதலாம் இராசேந்திரனின் கலைப்பாணியினை ஒத்ததாகவே விளங்குகின்றது.

கடையம்

கீழ்க்கடையம், மேற்கடையம் என இரு பகுதிகளாக உள்ளது. தென்காசி வட்டத்தில் தென்காசிக்கு தென்கிழக்கே அமைந்துள்ளது. கீழ்க்கடையத்தில் ஒரு பாறையில் மாறவர்மன் விக்கிரமபாண்டியனின் 3-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் இவ்வூர் கோநாட்டு விக்கிரம பாண்டிய நல்லூர் என்று குறிப்பிடப்படுகின்றது.

மேற்கடையத்தில் உள்ள கல்யாணி அம்மன் கேயிலில் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சடாவர்மன் சீவல்லபனின் 18-ஆவது மற்றும் 21-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும் அடங்கும். சீவல்லபனின் (கி.பி. 1120-1146) கல்வெட்டில் இவ்வூர் இராஜராஜ சதுர்வேதி மங்கலம் எனக் குறிப்பிடப்படுகின்றது. சுந்தரபாண்டியனின் (கி.பி. 1216-1244) கல்வெட்டில் இவ்வூர் கோனாடு கடையம் எனும் விக்கிரமபாண்டிய நல்லூரர் எனக் குறிப்பிடப்படுகின்றது. இறைவன் கலியுக இராமேஸ்வர முடையார் எனக் குறிப்பிடப்படுகின்றார். இவ்வூர் முதலில் இராஜராஜ சதுர்வேதி மங்கலமாக இருந்து பின் கடையம் எனும் விக்கிரமபாண்டிய நல்லூராக மாறித் தற்பொழுது கடையம் (கீழ்க்கடையம். மேற்கடையம்) எனும் பெயர்களில் மட்டும் வழங்கப்படுவதை இக்கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

கடையநல்லூர்

இவ்வூர் தென்காசி வட்டத்தில் தென்காசிக்கு வடக்கே 16 கி.மீ. தொலைவில் தென்காசி-இராசபாளையம் பெருவழியில் அமைந்துள்ளது.

இவ்வூரின் வரலாற்றினைப் பறைசாற்றும் வண்ணம் ஏராளமான கல்வெட்டுகளைத் தாங்கிக் கடகாலீஸ்வரர் சிவன் கோயிலும் கரியமாணிக்கப் பெருமாள் கோயிலும் விளங்குகின்றன. கடகாலீஸ்வரர் கோயிலில் மாறவர்மன் பெருமாள் குலசேகரபாண்டியனின் 19-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1498), சடாவர்மன் சீவல்லபனின் 7-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, (கி.பி. 1541) மாறவர்மன், சுந்தரபாண்டியனின் 5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சடாவர்மன் குலசேகர பாண்டியனின் 35-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆகியன பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு களில் இவ்வூர் வடவாரி நாட்டுக் கடையநல்லூர் என்றும் இறைவன் திருக்காமவீச்சுரமுடைய நாயனார் என்றும், திருக்காமவீச்சுரமுடைய மகாதேவர் என்றும் குறிப்பிடப் படுகிறார். கடகாலீஸ்வரர் கோயில் அம்மன் சன்னிதியில் உள்ள சடாவர்மன் குலசேகரபாண்டியனின் 11-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இறைவியை உலகுடைய நாச்சியார் எனக் குறிப்பிடுகின்றது. பூமாதுபுணர என்ற மெய்க்கீர்த்தியுடன் திகழும் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு ஒன்று கலங்காட்டூர்ப் பெருவழி மற்றும் கல்லங்கானத்துப் பெருவழி ஆகிய இரு பெருவழிகளையும் குறிப்பிடுகின்றது.

கரியமாணிக்கப் பெருமாள் கோயிலில் சடாவர்மன் குலசேகர பாண்டியனின் 30-ஆவது, மாறவர்மன் பராக்கிரம பாண்டியனின் 28-ஆவது, சடாவர்மன் குலசேகர பாண்டியனின் 38-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் பொறிக்கப் பட்டுள்ளன. சடாவர்மன் குலசேகர பாண்டியனின் கல்வெட்டில் இறைவன் குலசேகர விண்ணகரெம்பெருமான் எனக் குறிப்பிடப்படுகிறார், மாறவர்மன் பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டில் பொன்னின் பெருமாள் பாண்டியன் சந்தி என்ற இம்மன்னனின் மருமகன் பெயரால் நடத்தப்பட்ட பூசைக்கு நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டதை இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

கரியமாணிக்கப் பெருமாள் கோயிலுக்கு வெளியில் உள்ள கல்லில் பெருமாள் குலசேகர பாண்டியனின் 29-ஆவது

ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1504) பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு திருவேட்பூர் சம்மணமழகியான் ஆவுடையான் பெயரால் மடம் அமைத்ததைக் குறிப்பிடுகின்றது.

கரிசூழ்ந்தமங்கலம்

அம்பாசமுத்திரம் வட்டத்தல், அம்பாசமுத்திரத்திற்குக் கிழக்கே சுமார் 18 கி.மீ. தொலைவில் அமையப் பெற்றுள்ளது.

இவ்வூரிலுள்ள சுந்தரேஸ்வரர் சிவன் கோயிலும், வெங்கடாசலபதி கோயிலும் வரலாற்றுச் சின்னங்களாகத் திகழ்கின்றன. சிவன் கோயிலில் சடாவர்மன் வீரபாண்டியனின் 9-ஆவது மற்றும் 10-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும், மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 3-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் இவ்வூர் கரிசெயமங்கலம் என்றும் இறைவன் காணவினிய பாண்டீஸ்வரமுடைய நாயனார் என்றும் குறிப்பிடப் படுகின்றன. குலசேகரபாண்டியனால் இக்கோயில் விமானம் பழுது பார்க்கப்பட்டதனை இவனது கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

பெருமாள் கோயிலில் குலசேகரபாண்டியனின் (எம்மண்டலமும் கொண்டருளிய) 12-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும், கொல்லம் 577, 588, 720 ஆண்டுக் கல்வெட்டுகளும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் இவ்வூர் தென்திருவேங்கடம் என்றும் குலசேகரமங்கலம் என்றும் முள்ளி நாட்டு அமலலாஜபுரி சதுர்வேதிமங்கலம் என்றும் குறிப்பிடப்படுகிறது. இறைவன் திருவேங்கடநாதர் என்றும் தென்திருவேங்கடவிண்ணகரெம்பெருமாள் என்றும் தென் திருவேங்கடமுடைய நாயனார் என்றும் குறிப்பிடப் படுகிறார்.

கல்லிடைக்குறிச்சி

திருநேல்வேலிக்கு மேற்கே சுமார் 35 கி.மீ. தொலைவில் அம்பாசமுத்திரம் வட்டத்தில் இவ்வூர் அமைந்துள்ளது.

இவ்வூரில் நாகேஸ்வரமுடையார் கோயில், கிரி கிருஷ்ணன் கோயில் ஆகியன இருந்து மறைந்துள்ளன. குலசேகரமுடையார் கோயில், விநாயகர் கோயில், கொசக்குடி பெருமாள் கேயில்

ஆகியன உள்ளன. இக்கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ள பிற்காலப் பாண்டியரின் கல்வெட்டுகள் இவ்வூரின் வரலாற்றினை ஓரளவு அறிந்து கொள்வதற்குத் துணைபுரிகின்றன.

நாகேஸ்வரமுடையார் கோயிலில் முதலாம் சடாவர்மன் குலசேகரபாண்டியனின் (கி.பி. 1190-1218) 13-ஆவது மற்றும் 25-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள், முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் (கி.பி. 1206-1244) 6,9,21-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் மற்றும் விக்கிரமபாண்டியனின் (கி.பி. 1283-1296) 11-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆகியன பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகளில் இவ்வூர் முள்ளிநாட்டு பிரம்மதேயம் ஸ்ரீராஜராஜ சதுர்வேதி மங்கலத்துத் தென்பிடாகை கல்லிடைக்குறிச்சி எனக் குறிப்பிடப்படுகின்றது. இக்கோயில் இறைவன் நிலையுடைய பாண்டிய ஈஸ்வரமுடையார் எனக் குறிப்பிடப்படுகின்றார்.

கிரிகிருஷ்ணன் கோயிலில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 22-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, முதலாம் சடாவர்மன் குலசேகரபாண்டியனின் 2, 11 மற்றும் 14-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் பொறிக்கப் பட்டிருந்தன. கல்வெட்டுகளில் இறைவன் நாலாயிர விண்ணகரெம்பெருமான் எனக் குறிப்பிடப்படுகிறார். நாகேஸ்வரமுடையார் கோயிலும் கிரிகிருஷ்ணன் கோயிலும் முதலாம் சடாவர்மன் குலசேகர பாண்டியனாலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும்.

கொசக்குடி பெருமாள் கோயிலில் குலசேகர பாண்டியனின் 2-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும் வீரபாண்டியனின் 20-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் கொல்லம் 613-இல் (கி.பி. 1437) பொறிக்கப்பட்ட சிதைந்த கல்வெட்டொன்றும் காணப் படுகின்றது. இக்கல்வெட்டுகளில் இவ்வூர் மதிட்குறிச்சி மற்றும் மதில் குறிச்சி என்றும் இறைவன் நயினார் பெரிய பிரான் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

குலசேகரமுடையார் கோயிலில் வீரப்பநாயக்கரின் கல்வெட்டு கி.பி. 1548-இல் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கொல்லர்க்கும் தச்சர்க்கும் வரி நீக்கியமை குறித்துக் குறிப்பிடுகின்றது.

களக்காடு

இவ்வூர் நாங்குனேரி வட்டத்தில் நாங்குனேரிக்கு மேற்கே சுமார் 14 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரில் ஜமதக்னீஸ்வரர் கோயில், திருவேங்கடநாதர் கோயில், பெருமாள் கோயில் ஆகிய கோயில்கள் உள்ளன. பெருமாள் கோயிலில் உள்ள விசயநகரவேந்தர் சதாசிவதேவ மகாராயர் கல்வெட்டில் இவ்வூர் களக்காடு எனும் சோழகுலவல்லிபுரம் எனக் குறிப்பிடப்படுகிறது. சத்ய வாகீஸ்வரர் கோயில் ஆவணமொன்றில் இவ்வூர் வானவன் நாட்டு பச்சாற்று போக்கு களக்காடு எனும் சோழகுலவல்லிபுரம் என்றும் இறைவன் புறவெரிச்சு வரமுடையநாயனார் என்றும் குறிப்பிடப்படுகிறது. ஜமதக்னீஸ்வரர் கோயிலில் அபிராமபராக்கிரம பாண்டியனின் மகனான பராக்கிரம பாண்டியனின் 6-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1548), அதிவீரராம பாண்டியனின் 5-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன. ஜமதக்னீஸ்வரர் கோயில் விமானத்தின் வடசுவரில் ரகுவீரபாண்டியனின் (கி.பி. 1548) கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் இறைவன் திருவக்னீஸ்வரமுயை நாயனார் எனக் குறிப்பிடப்படுகின்றான். (ஜமதக்னீஸ்வரர் கோயிலின் கிழக்கே உள்ள ஒரு கல்வெட்டு பாலமார்த்தாண்ட குலராஜ சின்னஞ்சதேவர் இக்கோயிலில் நித்ய பூசைக்கு தானம் கொடுத்ததனைத் தெரிவிக்கின்றது.) திருவேங்கடநாதர் கோயிலிலுள்ள சீவல்லபனின் கல்வெட்டில் இறைவன் திருவேங்கடநாதர் என்றே குறிப்பிடப்படுகிறார்.

களக்காடு ஊருக்குக் கிழக்கே உள்ள ஓர் ஆல மரத்தடியில் உள்ள கல்லில் அழகன்பெருமாள் அதிவீரராமன் சீவல்லபனின் 38-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு சீவலநல்லூர் என்ற பெயரில் ஊர் ஒன்று

அமைத்ததனையும் இவ்வூரில் வீட்டுமனைகளுக்கான ஆறு திங்களுக்குரிய வரி தொடர்பாகவும் குறிப்பிடுகின்றது.

களக்குடி

இவ்வூர் திருநேல்வேலி வட்டத்தில் திருநெல்வேலிக்கு மேற்கே சமார் 24 கி.மீ. தொலைவில் உக்கிரன்கோட்டை அருகில் அமைந்துள்ளது. ஆனைமலைக் கல்வெட்டும், திருப்பரங்குன்றம் கல்வெட்டும், கரவந்தபுரம் என்றும் களக்குடி என்றும் குறிப்பிடுவது இவ்வூர் உள்ளடக்கிய பகுதியினையே ஆகும் என்று அறிஞர்கள் கருதுவர். உக்கிரன்கோட்டையில் உள்ள கல்வெட்டுகள் அப்பகுதியினைக் களக்குடி நாட்டுக் கரவந்தபுரம் என்று குறிப்பிடுகின்றன.

களக்குடியில் உள்ள கல்லணை ஒன்று பழைய கோயில் ஒன்றிலிருந்து கொண்டு வரப்பட்ட கருங்கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் கோயிலின் பகுதிகளும் துண்டுக் கல்வெட்டுகள் பலவும் உள்ளன. அக்கல்வெட்டுகளுள் ஒன்று வட்டெழுத்துக் கல்வெட்டாகும்.

இவை தவிர உக்கிரன்கோட்டையில் ஓரிடத்தைத் தோண்டிய போது கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் கலை அமைப்புகளுடன் திகழ்கின்ற பிராமியின் சிற்பமொன்றும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த சமணச் சிற்பமொன்றும் வெளிப்படுத்தப்பட்டது.

காரிசாத்தான்

இவ்வூர் சங்கரன்கோவில் வட்டத்தில் உள்ளது. இவ்வூரின் பெருங்கற்காலத்தினைச் சார்ந்த முதுமக்கட் தாழிகள், சீனத்துப்பானை ஓடுகள் மற்றும் மணிகள் பல கிடைத்துள்ளன. சீனத்துப் பானை ஓடுகள் இங்கு கிடைத்திருப்பதால், முற்காலத்தில் இது ஒரு வணிகத்தலமாக விளங்கியிருக்க வேண்டும். தற்போது தொன்மைச் சான்றுகள் ஏதும் காணப்படவில்லை. காலப்போக்கில் அவை அழிந்துபட்டிருக்க வேண்டும்.

காருக்குறிச்சி

இவ்வூர் அம்பாசமுத்திரம் வட்டத்தில், அம்பா சமுத்திரத்திற்குத் தென்கிழக்கே திருநெல்வேலி-அம்பாசமுத்திரம் பெருவழியில் அமையப்பெற்றுள்ளது. வடக்குக்காருக்குறிச்சி என்றும் தெற்குக்காருக்குறிச்சி என்றும் இரு பகுதிகளாக உள்ளது. வடக்குக்காருக்குறிச்சியில் வரதராஜப் பெருமாள் கோயில், குலசேகரநாதர் கோயில், சாஸ்தாகோயில் ஆகியன உள்ளன.

வரதராஜப் பெருமாள் கோயிலில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் (1216-1244) 20-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் இவ்வூர் முள்ளிநாட்டு ராஜராஜ சதுர்வேதி மங்கலம் எனக் குறிப்பிடப்படுகின்றது. மற்றொரு கல்வெட்டு இறைவனை சுந்தரபாண்டிய விண்ணகராழ்வார் எனக் குறிப்பிடுகின்றது.

குலசேகரநாதர் சிவன் கோயிலில் கோனேரின்மை கொண்டான் எனத் தொடங்கும் கல்வெட்டில் இவ்வூர் காரிக்குறிச்சி எனும் சுந்தரபாண்டிய நல்லூர் என்றும் இறைவன் குலசேகரீஸ்வரமுடையநாயனார் என்றும் குறிப்பிடப் படுகின்றன. இவ்வூரின் சாஸ்தா கோயிலுக்கருகில் ஒரு பாறையில் பொறிக்கப்பட்டுள்ள வீரபாண்டியனின் 3-ஆவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டிலும் இவ்வூர் காரிக்குறிச்சி என்றே குறிக்கப்பட்டுள்ளது. பிற்காலப்பாண்டியர் காலத்தில் இருந்த இப்பெயரே தற்போதும் இவ்வூருக்கு வழங்கப்பட்டு வருகிறது. நாதஸ்வர வித்துவான் காருக்குறிச்சி அருணாசலம், இவ்வூரில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிரியம்மாள்புரம்

இவ்வூர் அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள சேரன்மாதேவிக்குத் தெற்கே சுமார் 2.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர் பிற்காலப் பாண்டியர் காலத்தில் சிறப்புற்று விளங்கியமையினை இவ்வூரிலுள்ள அரிகேசரிநாதர் சிவன் கோயிலில் மாறவர்மன் விக்கிரமபாண்டியனின் (திருமகள்

ஜெயமகள்) 8-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு மாறவர்மன் சீவல்லபன் (பூமகள் ஜெயமகள்) 13-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சடாவர்மன் குலசேகர பாண்டியனின் 4-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, மாறவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் குலசேகர பாண்டியன் மற்றும் வீரபாண்டியன் ஆகியோரின் கல்வெட்டுகளும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் இவ்வூர் அரிகேசநல்லூர் என்றும் இறைவன் அரிகேசரிஈஸ்வரமுடைய நாயனார் என்றும் குறிப்பிடப் படுகின்றன.

கிருஷ்ணாபுரம்

இவ்வூர் பாளையங்கோட்டை வட்டத்தில், பாளையங் கோட்டையிலிருந்து 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வழகிய சிற்றூர் விசுவநாத நாயக்கர் மகனான கிருஷ்ணப்ப நாயக்க மன்னன் (கி.பி. 1564-1572) காலத்தில் உருவாக்கப்பட்டு இம்மன்னனின் பெயராலேயே அழைக்கப்படுகின்றது.

கிருஷ்ணப்ப நாயக்கர் இவ்வூரில் ஓர் அழகிய பெருமாள் கோயிலையும் எழுப்பியுள்ளார். இக்கோயில் நாயக்கர் காலக் கட்டடக் கலை அழகிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்கோயிலின் கருவறையும் அர்த்த மண்டபமும் மிக நுணுக்கமான கட்டடக் கலை அமைப்புடன் உருவாக்கப் பட்டுள்ளன.

இக்கோயிலில் அழகிய சிற்பங்களுடன் வடிக்கப்பட்டுள்ள ரங்கநாத மண்டபம் நாயக்கர் காலச் சிற்பக் கலைக்கூடமாகவே காட்சியளிக்கின்றது. இச்சிற்பங்களில் நரம்புகளையும், கை, கால் நகங்களையும் மிக நுணுக்கமாகச் சிற்பி வடித்துள்ளான். இச்சிற்பங்களில் காணப்படும் அழகிய அணிவகைகள் நாயக்கர் கால அணிகலன்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

குறத்தி ஒரு குழந்தையைக் கடத்திச் செல்வது போன்ற சிற்பமும், அதே நேரத்தில் குழந்தையைத் தவறவிட்டதில் தன் குழந்தை எங்கே இருக்கிறது என்று சோதிடரிடம் கேட்பது போன்ற சிற்பமும் சிறந்த கற்பனையுடன் அழகாக வடிக்கப்பட்டுள்ளன. அதே நேரத்தில் குழந்தையைத் தேடி

வரும் குதிரை வீரனின் சிற்பமும் சிறப்புடன் வடிக்கப் பட்டுள்ளது. மற்றொரு சிற்பத் தொகுதி குறவன் ஒருவன் அரசகுமாரியைத் தூக்கிச் செல்வது போன்று உருவாக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்பகள் காண்போர் மனதை ஈர்க்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணப்ப நாயக்கர் தன் தந்தை விசுவநாத நாயக்கர் பெருமைக்காக இக்கோயிலை எழுப்பினதாகக் கூறுகின்றார். கல்வெட்டில் இவ்வூர் கிருஷ்ணாபுரம் என்றும் இறைவன் திருவேங்கடநாத தேவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள விசயநகர வேந்தரான ஸ்ரீரங்கதேவ மகாராயர் (கி.பி. 1578-1586) கல்வெட்டு வீரப்ப நாயக்கர் அவரது தந்தை கிருஷ்ணப்ப நாயக்கர் இக்கோயிலுக்கு அரியகுளம், புத்தனேரி, கொடிக்குளம் போன்ற பல கிராமங்களைத் தானமாகக் கொடுத்ததை வீர ஸ்ரீசதாசிவதேவமகாராயர் (சகம் 1485- கி.பி.1563) கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது. மேலும் கிருஷ்ணப்ப நாயக்கரின் வேண்டுகோளின்படி சதாசிவராயர் இக்கோயிலுக்குக் கொடை கொடுத்ததனை சதாசிவராயரின் (சகம் 1489-கி.பி. 1567) செப்பேடு கூறுகின்றது.

கீழநத்தம்

இவ்வூர் பாளையங்கோட்டைக்கு வடகிழக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர்ப் பகுதியில் பண்டைய தாழிகள் கிடைத்துள்ளன. இவற்றோடு கருப்பு-சிவப்பு வண்ணப் பானை ஓடுகளும் ஏராளமாகக் கிடைத்துள்ளன. இவை தவிர இரும்பு மற்றும் வெண்கலத்தாலான பொருட்களும் கிடைத்துள்ளன. இவற்றில் இரும்பிலான தட்டைப் போன்ற அமைப்புடைய சிறிய விளக்கு ஒன்று குறிப்பிடத்தக்கதாகும். மேலும் தங்கத்தினாலான காதணியும், குழிவான பானை மூடியும் கிடைத்துள்ளன. இப்பகுதியில் முழுமையான எலும்புக் கூடு ஒன்றும் கிடைத்துள்ளது. இவை இவ்வூரின் பழமையைச் சுட்டும் அரிய சான்றுகளாகத் திகழ்கின்றன.

இவ்வூரில் பிற்காலப் பாண்டியர் கலைப்பாணியுடன் திகழும் சிவன் கோயில் ஒன்றும் உள்ளது.

கீழாம்பூர்

அம்பாசமுத்திரம் வட்டத்தில், அம்பாசமுத்திரத்திற்கு மேற்கே சுமார் 8 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமையப் பெற்றுள்ளது. இவ்வூரில் புதிய கற்காலக் கருவி ஒன்று தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட வரலாறு நுண்கற்காலத்திலிருந்துதான் சான்றுகள் கிடைப்பதாக இது நாள்வரை தொல்லியல் மற்றும் வரலாற்று அறிஞர்களால் நம்பப்பட்டு வந்தது. ஆனால் இங்கு முதன்முறையாகப் புதிய கற்காலக் கருவி கிடைத்ததன் மூலம் இப்பகுதியின் பண்டைய வரலாறு புதியகற்காலத்திலேயே தொடங்கப்பட்டுவிட்டதனை உணர்கிறோம். மேலும் இவ்வூரில் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்காலத்தினைச் சார்ந்த ஈமத்தாழியும் காணப்படுகின்றது. புதிய கற்கால மக்கள் பெருங்கற்காலச் சான்றுகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதன் மூலம் இவ்வூர் சிறப்புப் பெறுகின்றது.

குற்றாலம்

தென்காசி வட்டத்தில், திருநேல்வேலிக்கு மேற்கே 58 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூர்ப் பகுதியில் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்காலச் சின்னங்களான ஈமத்தாழிகள் கிடைத்துள்ளன. ஒவ்வோர் ஆண்டும் லட்சக்கணக்கான இந்தியர்களை மட்டுமின்றி வெளிநாட்டுப் பயணிகளையும் ஈர்க்கும வண்ணம் இங்கு விழும் கண்கவர் அருவிகள் தென்தமிழ் நாட்டிற்கே சிறப்பினைக் கொடுக்கும் வண்ணம் அமைந்துள்ளன. இப்பகுதியிலுள்ள பொதிகை மலையில் அகத்தியர் தவமிருந்ததாக நம்பப்பட்டு வருகிறது. இது ஒரு பாடல் பெற்ற தலமாகும். இங்குள்ள சிவன் கோயிற் கல்வெட்டுகளில் இவ்வூர் தென்வார நாட்டுத் திருக்குற்றாலச் சதுர்வேதிமங்கலமென்றும் இறைவனின் பெயர் குறும்பலா ஈசர் என்றும் திருக்குற்றாலநாதர் என்றும் திருக்குற்றாலமுடைய

நம்பிரானார் என்றும் குறிப்பிடப்படுகின்றன. இச்சிவன் கோயிலில் மாறவர்மன் விக்கிரமபாண்டியனின் (திருமலர்மாது) 5-ஆவது ஆட்சியாண்டு, சடாவர்மன் வீரபாண்டியனின் (திருவளர்முலை) 3-ஆவது ஆட்சியாண்டு, குலசேகர பாண்டியன் (எம்மண்டலமும் கொண்டருளிய) 9 மற்றும் 11-ஆவது ஆட்சியாண்டு சடையமாறன் ஆகிய பாண்டியர் கல்வெட்டுகளும், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகிய சோழர் கல்வெட்டுகளும் பொறிக்கப்பட்டுள்ளன. பிரதான அருவி, பழைய குற்றால அருவி, புலி அருவி, சிற்றருவி, செண்பகா அருவி, தேன் அருவி, சாமியார் அருவி போன்றவை மேற்கு மலைத் தொடர்ச்சியிலிருந்து உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் விழுகின்றன. ஆடவல்லானின் ஐந்து சபைகளுள் சித்ரசபை இங்கு அமையப்பெற்றுள்ளது. ஆடவல்லானின் திரிபுரத்தாண்டவம் இங்கே நடைபெற்றதாகத் திருப்பத்தூர்ப் புராணம் வாயிலாக அறியலாம். பராக்கிரம பாண்டியன் (1422-1463), சித்ரசபையைக் கட்ட ஆரம்பித்தான். இப்பகுதியின் தொன்மை வரலாற்றினையும், நாட்டுப்புறக் கலைகளையும் விளக்கும் வண்ணம் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அகழ்வைப்பகம் ஒன்றினைக் குற்றாலம் பேருந்து நிலையத்திலிருந்து பிரதான அருவிக்கு செல்லும் பாதையில் அமைத்துள்ளது.

கோவில்குளம்

இவ்வூர் அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ளது. இவ்வூரிலுள்ள தென்னழகர் கோயில் இவ்வூரின் வரலாற்றுச் சான்றாகத் திகழ்கின்றது. இக்கோயிலில் சடாவர்மன் குலசேகரபாண்டியனின் 13-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சடையமாறனின் 21-ஆவது ஆட்சியாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டு, மாறவர்மன் விக்கிரம பாண்டியனின் (கி.பி. 1282-1433) 4-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆகியன பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் இவ்வூர் முள்ளி நாட்டு பிரம்மதேயம் ராஜராஜச் சதுர்வேதிமங்கலம் என்றும், முள்ளிநாட்டுக் குளம் என்றும், இறைவன் ஸ்ரீபதி விண்ணகரெம் பெருமான் என்றும், சுந்தரத்தோள் எம்பெருமான் என்றும்

குறிப்பிடப்படுகின்றன. இவ்வூர் முதலில் முள்ளி நாட்டுக்குளம் ஆக இருந்து பின் இராஜராஜச் சதுர்வேதிமங்கலமாக மாறித் தற்போது கோவில்குளம் என வழங்கப்பட்டு வருகிறது.

தாருகாபுரம்

தென்காசி வட்டத்தில் தென்காசி-மதுரை சாலையிலுள்ள சுப்பிரமணியபுரம் என்ற ஊரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது.

இவ்வூரின் பழமைக்குச் சான்றாக இங்குள்ள சிவன் கோயில் விளங்குகின்றது. இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில் இவ்வூர் மலையடிக்குறிச்சி என்றும் இறைவன் கானகறுத்த மகாதேவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்பொழுது இவ்வூருக்கு அருகிலுள்ள மற்றொரு கிராமத்தினையே மலையடிக்குறிச்சி என அழைக்கின்றனர். பாண்டியருக்கும் சேரருக்கும் இடையே ஏற்பட்டபூசல் தீர இவ்விறைவன் உதவியதால் பிணக்கறுத்தவர் எனப்பெயர் பெற்றுள்ளார் என்று கூறுகின்றனர். தற்பொழுது இவ்விறைவன் மத்தியஸ்தநாதர் என அழைக்கப்படுகிறார். இக்கோயில் தென்காசிப் பாண்டியர்களின் கட்டடக் கலைப்பாணியினைக் கொண்டு விளங்குகின்றது. ஆனால் மகாமண்டபம் பழைய அமைப்புடன் திகழ்கிறது. அம்மகாமண்டபத்தில் குலசேகர பாண்டியன், சுந்தரபாண்டியன் ஆகிய பாண்டிய மன்னர்களது கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே இக்கோயில் இடைக்காலப் பாண்டியர் காலத்திலேயே இருந்திருக்க வேண்டும் எனக் கருதலாம்.

இவ்வூர் தலைக்கோட்டை சமன் பகுதியைச் சேர்ந்ததாகும். இங்கு சமீன் பரம்பரையினர் வாழ்ந்து வருகிறார்கள்.

திருப்புடைமருதூர்

திருப்புடைமருதூர் திருநெல்வேலி மாவட்டத்தில் வீரவநல்லூருக்கு வடக்கே 7 கி.மீ. தொலைவில் தாமிரபரணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இவ்வாற்றின் வளைவு ஒன்றில் கிழக்கு நோக்கிய வண்ணம் நரம்புநாதர்

என்றழைக்கப்படும் சிவன் கோயில் காணப்படுகின்றது. இக்கோயிலின் கட்டடக் கலையினை நோக்கும் பொழுது இது முதலாம் இராசராச சோழனால் கட்டப்பட்டிருக்கலாம் என்று கருத இடமுள்ளது.

இக்கோயிலிலுள்ள சண்டேஸ்வரர் சன்னதியில் மேற்புறச்சுவரில் இம்மன்னது சிதைந்த, முழுமை பெறாத கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இதே மன்னனின் மற்றுமொரு கல்வெட்டு 10-ஆவது ஆட்சியாண்டில் நிலம் கொடை கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. கீழ்ப்புறச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள சடையவர்மனின் 20-ஆவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் இவ்வூர் பாண்டி மார்த்தாண்ட வளநாட்டுத் திருப்புடையமருதில் எனக் குறிப்பிடப்படுகின்றது. கல்வெட்டில் இறைவன் புத்தார் ஜுனேஸ்வரர் எனக் குறிப்பிடப்படுகின்றார்.

மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 32-ஆவது ஆட்சியாண்டுக் (எம்மண்டலமும் கொண்டருளிய) கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. கொல்லம் 662-இல் (கி.பி. 1486) பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று இவ்வூரினை முள்ளி நாட்டுத் திருப்புடைமருதூர் என்றும் இறைவனை நரம்பு கொண்டருளிய நாயனார் என்றும் குறிப்பிடுகின்றது. அதே கோயிலில் பூதலவீரன் உதைய மார்த்தாண்டவர்மனின் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் கோபுரத்தின் ஐந்து நிலைகளிலும் தீட்டப்பட்டுள்ள கி.பி 16-ஆம் நூற்றாண்டு விசயநகரர் காலத்து ஓவியம் அரேபியர்கள் தமிழ்நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்ததைச் சுட்டும் வண்ணம் அமைந்துள்ளது.

திருவாலீஸ்வரம்

இவ்வூர் அம்பாசமுத்திரம் வட்டத்தில் மன்னார் கோயிலிலிருந்து 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் கடனாநதிக் கரையில் நெல்வயல்களுக்கு நடுவே அமைந்துள்ள சிவன் கோயில் இவ்வூரின் வரலாற்றினை அறிந்துகொள்வதற்கு உதவுகின்றது.

கடனாநதியின் பெயர் கடம் என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து வந்துள்ளது. கடம் என்றால் பானை அல்லது கலசம் என்று பொருள். இந்நதிநீர் அகஸ்தியர் கையிலிருந்த கலசநீர் என்றும் அகஸ்தியர் இக்கோயிலுக்கு மேற்கேயுள்ள மலையடிவாரத்தில் தங்கியிருந்தார் என்றும் நம்பப்படுகிறது.

இக்கோயில் சோழர் காலக் கட்டடக் கலைப்பாணிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இக்கோயிலில் சோழர், சோழ பாண்டியர் மற்றும் பிற்காலப் பாண்டியர்களின் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராசராசனின் 9-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வூரை முள்ளிநாட்டு ராஜராஜவளநாட்டு பிரம்மதேயம் ராஜராஜ சதுர்வேதிமங்கலம் எனக் குறிப்பிடுகின்றது. பிரம்மதேசம், திருவாலீஸ்வரம் மற்றும் மன்னார்கோயில் ஆகிய இம்மூன்று ஊர்களும் ஒரே பகுதியாக ராஜராஜச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரில் ஒரு பிரம்மதேயமாக விளங்கியுள்ளது. முதலாம் இராசராசன் காலத்திலும் அவனுக்குப் பின்னும் இப்பகுதி ஒரு முக்கிய இராணுவ மையமாக விளங்கியுள்ளது. இவர்கள் காலத்தில் அவனுக்குப பின்னும் இப்பகுதி ஒரு முக்கிய இராணுவ மையமாக விளங்கியுள்ளது. இவர்கள் காலத்தில் நாகர்கோவிலில் கோட்டாற்றுக்கு அருகில் நிறுத்தியதைப் போன்று பெரும் படையொன்று இப்பகுதயிலும் நிறுத்தப்பட்டிருந்தது. இதற்கு மூன்று கை மகாசேனை என்று பெயர். சடாவர்மன் சுந்தரசோழ பாண்டியனின் கல்வெட்டு இக்கோயில் இறைவனைத் திருவாலீஸ்வரம் உடைய மகாதேவர் எனக் குறிப்பிடுகின்றது. ஊரினை முள்ளிநாட்டு முடிகொண்ட சோழ வளநாட்டு ராஜராஜப் பாண்டிநாட்டு பிரம்மதேயம் ராஜராஜ சதுர்வேதிமங்கலம் எனக் குறிப்பிடுகின்றது. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், சடாவர்மன் குலசேகர பாண்டியன் (பூவின்கிழத்தி) சீவல்லபன் ஆகியோரின் கல்வெட்டுகளும் பொறிக்கப்பட்டுள்ளன. பாண்டியர் கல்வெட்டுகள் இவ்வூரைத் திருவாலீஸ்வரம் என்றும் ராஜராஜ சதுர்வேதிமங்கலம் என்றும் குறிப்பிடுகின்றன.

இங்குள்ள சௌந்தர்யநாயகி அம்மன் கோயிலில் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோயிற் கல்வெட்டுகளிலிருந்து திருவாலீஸ்வரம் என்பது ஊரினையும், கோயிலினையும் குறிப்பிடுவதை அறியலாம். இக்கோயில் விமானத்தில் கர்ணகூடுசாலைப் பகுதிகளில் காணப்படும் சிற்பங்கள் சிறந்த கலை நயத்துடன் வடிக்கப்பட்டுள்ளன.

தென்காசி

திருநெல்வேலிக்கு மேற்கே 50 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூர் தென்காசிப் பாண்டிய மன்னன் பராக்கிரம பாண்டியனால் (கி.பி. 1422-1463) உருவாக்கப் பட்டதாகும்.

இறைவன் தனது கனவில் தோன்றி, வடகாசியில் உள்ள ஆலயம் பழுதடைந்து விட்டதால், தென்காசியில் ஒரு கோயில் எழுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகவும், அதன்படி தென்காசியில் காசிவிசுவநாதர் ஆலயத்தினை எழுப்பியதாகவும் இவனது கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்படுகிறது.

இக்கோயிலில் உள்ள தூண் மண்டபம் அழகிய சிற்பங்களைத் தாங்கி நிற்கிறது. வீரபத்திரன், காளி, ஊர்த்துவதாண்டவர் ஆகிய சிற்பங்கள் மிகப்பொலிவுடன் வடிக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலில் 9 நிலைக் கோபுரப் பணியினைத் தொடங்கிய பராக்கிரம பாண்டியன், கற்பணி முடியும் தருவாயில் இறந்து விடுகிறான். அவனது தம்பியாகிய சடாவர்மன் குலசேகரபாண்டியனால் (கி.பி.1430-1473) மீதி உள்ள 8 நிலைச் சுதைப்பகுதி முடித்துத் திருப்பணி நடத்தி வைக்கப்பட்டுள்ளது.

கோபுரவாயிலில் அமைந்துள்ள பராக்கிரம பாண்டியனின் பாடற் கல்வெட்டுகள் புகழ் பெற்றவையாகும். கல்வெட்டுகளில் இவ்வூர் தட்சிணகாசி என்றும் இறைவன் விசுவநாதர் என்றும் குலசேகரநாதர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இறைவி உலக முழுதுடைய நாச்சியார் என்றும் குழல்வாய் மொழி அம்மை நாச்சியார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடல் கல்வெட்டு 1

ஆராயிலுமிந்தத் தென்காசி மேவு
பொன்னாலயத்து வராததோர் குற்றம்

வந்தாலங்கு வந்ததனை நேராகவே யொழித்துப்
புரப்பார்கள் நீதியுடன்
பாரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே.

பாடல் கல்வெட்டு 2

விண்ணாடர் போற்றும் தென்காசி மீதினியினில் எங்களண்ணாழ்வி செய்த பணி இப்படி குறையாய்க் கிடக்க வொண்ணாமல் . . . . . .

தென்திரிபுவனம்

தென்திரிபுவனம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் வீரவநல்லூரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்துள்ள அழகிய சிற்றூராகும். இவ்வூரின் பழமைக்குச் சான்றாக இவ்வூர்ச் சிவன் கோயில் விளங்குகின்றது. தன்பொருநைப் பேராற்றங்கரையில் அமைந்துள்ள இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளின் பழமையானது சடையவர்மன் ஸ்ரீவல்லபனுடைய (கி.பி. 1090-1116) கல்வெட்டாகும். எனவே இம்மன்னன் காலத்தில் இக்கோயில் எழுப்பப்பட்டிருக்க வேண்டும் எனத்தெரிகிறது. இங்கு திருவிதாங்கூர் மன்னருடைய கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகளில் இவ்வூர் தென்திருபுவனம் என்றும், சுந்தர பாண்டி நல்லூர் என்றும் குறிப்பிடப்படுகின்றது. இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயரினைத் தெள்நீர் வண்ணமுடைய மகாதேவர் என்றும், தென்திருபுவன முடையார் என்றும், கட்டடக்கலை அமைப்புடனும், எழிலார்ந்த கோட்டச் சிற்பங்களுடனும் பார்ப்போர் வியக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இறைவன் கோயிலை அடுத்துத் தென்புறத்தில் இறைவி கோயில் அமைக்கப் பட்டுள்ளது. கோயில் கல்வெட்டுகளில் இறைவியின் பெயர் திருப்பூவின் தெவிநாச்சியார் என்று குறிப்பிடப்படுகின்றது.

இக்கோயிலின் திருவிதாங்கூர் மன்னன் தான் பிறந்த பரணி நட்சத்திரத்தில் தென்திருபுவனமுடைய நாயனார்க்கு விழா

நடத்துவதற்காக நிலம் தானமாக வழங்கியுள்ளான். இச்செய்தியினை இக்கோயிலில் உள்ள இம்மன்னனது கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது.

பன்மொழி

இவ்வூர் தென்காசி வட்டத்தில் தென்காசிக்கு வடமேற்கே 11 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரில் நகரீஸ்வரமுடையார் எனும் பிற்காலப் பாண்டியர் கோயில் உள்ளது. இக்கோயிலில் சடாவர்மன் வீரபாண்டியன், அபிராம பராக்கிரம பாண்டியனின் மகனான ஜடிலவர்மன் பெருமாள் பராக்கிரம பாண்டியன், ஜடிலவர்மன் சீவல்லபனின் 10-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1544) ஜடிலவர்மன் அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியனின் 30-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1545) ஆகியன பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகளில் இவ்வூர் பன்மொழி என்றும், பைம்பொழில் என்றும், இறைவன் நகரீஸ்வர முடையார் என்றும், நகரீச்சரமுடைய நாயனார் என்றும் குறிப்பிடப் படுகின்றன. சடாவர்மன் வீரபாண்டியன் காலத்தில் இக்கோயில் எழுப்பபப்பட்டிருக்கலாம். பின் தென்காசிப் பாண்டியர்களால் விரிவடைந்துள்ளது. 13-ஆம் நூற்றாண்டிலேயே இவ்வூர் சிறப்புற்று விளங்கியமையினை சடாவர்மன் வீரபாண்டியனின் கல்வெட்டு நமக்கு உணர்த்துகின்றது.

பத்தமடை

அம்பாசமுத்திரம் வட்டத்தில் அம்பாசமுத்திரத்திற்குக் கிழக்கே சுமார் 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பத்தமடை என்றாலே நமக்குப் பாய் தான் நினைவிற்கு வரும். பத்தமடைப் பாய் அந்த அளவுக்குப் பெயர்பெற்றது. இவ்வூர் சுவாமி வரலாற்றினை அறிவதற்கு இவ்வூரில் அமையப் பெற்றுள்ள கரியமாணிக்கப் பெருமாள் கோயில் மற்றும் பிலவநாதர் சிவன் கோயில் ஆகியன துணைபுரிகின்றன. பிற்காலப் பாணடியர் காலத்தில் இவ்வூர் சிறப்புற்று விளங்கியுள்ளது.

கரியமாணிக்கப் பெருமாள் கோயிலில் சடாவர்மன் குலசேகர பாண்டியனின் (பூதலமடந்தை) 3-ஆவது மற்றும் 8-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகளும், மாறவர்மன் விக்கிரம பாண்டியனின் (திருமகள், ஜெயமகள்) 13-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகளில் இவ்வூர் பத்தமடை என்றும் இறைவன் ஆயிரத்தென்ம விண்ணகராழ்வார் என்றும், குறிப்பிடப் படுகின்றன. பிலவநாதர் சிவன் கோயிலில் சடாவர்மன் குலசேகர பாண்டியனின் (பூவின் கிழத்தி) 12-ஆவது மற்றும் 13-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் இவ்வூரைப் பத்தமடை என்றும், இறைவனை சீவல்லவயீச்சுரமுடையார் என்றும், சீவல்லவயீச்சுரமுடைய பரமசுவாமி என்றும் குறிப்பிடுகின்றன. இக்கோயிலின் ஒரு கல்வெட்டு கரியமாணிக்கப் பெருமாள் கோயில் இறைவியை ஆயிரத்தென்ம திருப்பள்ளியறை நாச்சியார் என்று குறிப்பிடுகின்றது. பிற்காலப் பாண்டியர் காலத்தில் வழங்கப்பட்ட பத்தமடை எனும் பெயரே இன்றும் மாறாமல் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பழைய குற்றாலம்

குற்றாலத்திலிருந்து அம்பாசமுத்திரம் செல்லும் சாலையில் 5 கி.மீ. தொலைவில் பழைய குற்றாலம் செல்லும் பாதை பிரிகிறது. இப்பாதையின் தொடக்கத்தில் அழுதகன்னி ஆறு எனும் சிற்றாறு ஓடுகிறது. இவ்வாற்றின் இரு கரைகளிலும் நுண்கற்காலக் கருவிகள், இக்கருவிகள் செய்யப் பயன்படுத்தப் பட்ட மூலக்கற்கள், பெருங்கற்காலத்தைச் சார்ந்த கற்கிடைகள் கருப்பு-சிவப்பு வண்ணப் பானை ஓடுகள் ஆகியன காணக்கிடைக்கின்றன. இங்கு கிடைக்கும் நுண்கற்கருவிகள் சாயர்புரத்தில் கிடைக்கும் நுண்கற்கருவிகளை ஒத்ததாகக் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்டு இப்பகுதியின் தொன்மை வரலாறு கி.மு. 4000-லிருந்து தொடங்கி யுள்ளமையினை அறியலாம்.

பாபநாசம்

இவ்வூர் அம்பாசமுத்திரம் வட்டத்தில் அம்பாசமுத்திற்கு மேற்கே சுமார் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

இத்தலம் அகத்திய முனிவருக்கு சிவபெருமான் திருமணக் கோலத்தில் காட்சி கொடுத்த தலமாகக் கூறப்படுகிறது. இங்கு முக்காளலிங்கர் சிவன் கோயில் தாமிரபாணி நதிக்கரையில் உள்ளது. இக்கோயிலில் உள்ள சிறு மண்டபத்தில் இறைவனும் இறைவியும் ரிஷபாரூடராய்த் திருமணக்கோலத்தில்

அகத்தியருக்குக் காட்சி கொடுக்கும் நிலையில் அழகாக வடிக்கப்பட்டுள்ளது. இத்தலத்தில் சித்திரை விஷு தான் சிறப்பான நாளாகும். அன்றைய தினம்தான் இறைவன் அகத்தியருக்கு திருமணக்கோலம் காட்டியதாக நம்பப்படுகிறது. இக்கோயிலுக்கு வந்து தாமிரபரணி நதியில் நீராடினால் நமது பாவங்களெல்லாம் நீங்கிவிடும் என்பது ஐதீகம், இக்காரணத்தினால்தான் பாபநாசம் எனப்பெயர் பெற்றுள்ளது. இக்கோயில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் எழுப்பப் பட்டிருக்கலாம்.

இக்கோயிலிருந்து மலைமேல் ஏறிச் சென்றால் பாபநாசம் அணைக்கட்டைப் பார்க்கலாம். அணைக்கட்டினைப் பார்த்துத் திரும்பும் வழியில் அகத்தியருக்கும், முருகனுக்கும் சிறு கோயில்கள் எழுப்பப்பட்டிருப்பதைக் காணலாம். இக்கோயில் களுக்கு அருகிலேயே குளிப்பதற்கு வசதியாக அகத்தியர் அருவி அமையப்பெற்றுள்ளது. இங்கிருந்து நாலு கல் தொலைவு மலை மீதேறிச் சென்றால் பிரமாண்டமான கல்யாணி தீர்த்த அருவியினைக் காணலாம்.

பாப்பான்குளம்

அம்பாசமுத்திரம் வட்டத்தில், அம்பாசமுத்திரத்திற்கு வடக்கே அமைந்துள்ளது. இவ்வூரில் இராமசாமி கோயில் மற்றும் சித்தஞானேஸ்வரர் கோயில் ஆகிய இருகோயில்கள் அமைந் துள்ளன. இராமசாமி கோயிலில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் (கி.பி. 1216-1244) 23-ஆவது ஆட்சி யாண்டுக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் இவ்வூர் முள்ளிநாட்டு ராஜராஜ சதுர்வேதி மங்கலத்து வடமேல் பிடாகை வேளாாளர் குறிச்சி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறைவன் பகவதி விண்ணகராழ்வார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். சித்தஞானேஸ்வரர் கோயிலில் குலசேகரமாறவர்மன் கல்வெட்டுகள் பாண்டியனின் (கி.பி. 1260-1311) 8-ஆவது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்ல்வெட்டுகள் இவ்வூர் கற்குறிச்சி எனவும், இறைவன் உடையார் கருத்தரித்து முடிந்த பாண்டி ஈச்சுரமுடைய நாயனார் எனவும் குறிப்பிடப் படுகின்றார். முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திற்குப்பின் இவ்வூர் பெயர் மாற்றம் அடைந்திருப்பதை அறியலாம்.

நிழற்படங்கள்

அகழ்வைப்பகம் – குற்றாலம்



விஷ்ணு சிலை – அகழ்வைப்பகம்

திருக்குற்றாலநாதர் கோயில் –குற்றாலம் (தென்காசி)

கிருஷ்ணாபுரம் கோயில்

கிருஷ்ணாபுரம் – கற்சிற்பங்கள்

கிருஷ்ணாபுரம் - கற்சிலை





திருவாலீஸ்வரம் திருக்கோயில் மற்றும்
கல்வெட்டு





திருவாலீஸ்வரம் திருக்கோயில் - கற்சிற்பங்கள்

நெல்லையப்பர் கோயில் - திருநெல்வேலி



பழைய குற்றாலம்

பாபநாசம்